2023 ஒக்டோபர்

# பிரஜை

அடிமட்டத்திலான பேச்சுவார்த்தை 2



(புகைப்படம்: Parliament of Sri Lanka)


இலங்கைவாழ் ஆதிவாசிகளின் அடிப்படை உரிமைகள் 03

நுண் நிதிக் கடன்பொறியில் சிக்கியுள்ள ஆதிவாசி பெண்கள் 04

விழுலுக்கு நீர் இரைத்தல் 06

மண்ணின் மரபுரிமைக் காத்தல் 09

ஆதிவாசிகளின் எல்லா பிரச்சினைகள் பற்றியும் பிரதமருக்கு தெரியப்படுத்தி உள்ளோம் 10




புகைப்படம்: dailynews.lk

## பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை

**ஊருவரிகே வண்ணில எத்தோ ஆதிவாசிகளின் தலைவன்**

நாங்கள் பாராளுமன்றத்திற்குச் சென்று ஆதிவாசிகள் மிக நீண்ட காலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய மகஜர் ஒன்றை பிரதமரிடமும் சபாநாயகரிடமும் கையளித்தோம். அது இந்த ஆண்டு ஜனவரியில் நடந்தது. அதற்கு இதுவரை எந்தப் பதிலும் இல்லை. பிரச்சனைகளுக்குத் தீர்வும் இல்லை. அந்த மகஜரில் நாங்கள் எதிர்நோக்கும் காணி

05



புகைப்படம்: dailynews.lk

## பிரதமரே செயல்படுத்துங்கள்

கலாசார இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க 2023 ஜனவரி 18 தேதி நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது ஆதிவாசிகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் அவர்களுடைய பிரச்சனைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென தெரிவித்தார்.

கலாசார இராஜாங்க அமைச்சர் அதைத் தெரிவித்து ஒன்பது மாதங்கள் கழிந்துள்ள நிலையில் அந்தக் கூற்று

02

01 பக்கத்தில் இருந்து

**பிரதமரே செயல்படுத்துங்கள்**

எந்தளவுக்கு உயிர்ப் பெற்றுள்ளது என்பதை அவரிடமே மீண்டும் கேட்க வேண்டி உள்ளது.

அவர் தனது உரையில் “நாம் ஆதிவாசிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். எமது அமைச்சின் அபிவிருத்தி மரபுரிமை அலுவலகம் அதையொட்டி பல கருமங்களை ஆற்றி வருகிறது” கூறியிருந்தார்.

அந்தப் பணிகளில் எந்தளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது? எனக் கேட்டபோது அபிவிருத்தி மரபுரிமை பிரிவின் மேலதிக செயலாளர் திருமதி. நிஷாந்தி ஜயசிங்ஹ இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஒவ்வொன்றாக விவரித்தார். (அதன் முழு விவரம் ஒரு கட்டுரையாக இங்கே தரப்பட்டுள்ளது)

ஆதிவாசிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிய விபரங்கள் அடங்கிய விரிவான தகவல்களும், காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகள் அதேபோல் அவற்றுக்குரிய அமைச்சுகளால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள், கிடைத்த பதில்கள் என்பன அந்தக் கட்டுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆனால், இழுபறி நிலை இன்னும் தொடர்கிறது. பிரச்சினைகளை ஒரு தளத்தில் நகர்த்தி எவ்வாறு தீர்க்க முடியும்? தற்போதுள்ள பெரிய பிரச்சனையே இதுதான். அபிவிருத்தி மரபுரிமைப் பிரிவின் மேலதிக செயலாளர் திருமதி நிஷாந்தி ஜயசிங்க இது பற்றி கூறுகையில் “நமது அமைச்சர் தயாரித்த, ஆதிவாசிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றிய ஆவணத்தை பிரதமரிடம் கையளித்துள்ளோம். ஆதிவாசிகள் விவகாரம் எங்களுடைய அமைச்சுக்கு உரிய ஒன்றாக இருந்தாலும் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல்வேறு அமைச்சுகளின் இடையீடு அவசியம் என்பதால் அதில் வெற்றி காண பிரதமரின் ஒத்துழைப்பு அவசியம்” என்றார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, நீர் வளங்கள் அமைச்சு, குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கைப் போக்குவரத்துச் சபை, வனஜீவராசிகள் திணைக்களம், வனப்பாதுகாப்பு திணைக்களம், தேசிய பௌதீக திட்ட திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, ஆயுர்வேத திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம் போன்ற விவகாரங்கள்குரிய அமைச்சுகள் ஒன்றுபட்டு ஒத்துழைக்கும் வரை பிரச்சினைகளை தீர்ப்பது கடிதம்தான். அந்தவகையில் கலாசார அலுவல்கள் அமைச்சு இந்த எல்லா அமைச்சர்களையும் ஒன்று திரட்டி பிரதமர் ஊடாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயல்கிறது. இது அடுத்த கட்டத்திற்கு நகர வேண்டுமானால் பிரதமரின் தீர்வுகள் அவசியம்.

ஆதிவாசிகள் வாழும் எல்லா பிரதேசங்களிலும் கள ஆய்வுகளை மேற்கொண்டு அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தயாரிக்கப்பட்ட கொள்கை ஆவணமும் கோரிக்கைகளும் பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் அதேபோல சபாநாயகரிடமும் கையளிக்கப்பட்டுள்ளன. அதனால் பாராளுமன்றத்தில் விவாத பொருளான ஆதிவாசிகளின் பிரச்சினைகளை காலம் தாழ்த்தாமல் தீர்க்கவேண்டிய தேவை தேசிய அளவில் உணரப்பட்டுள்ளது

**ஆதிவாசிகள் வாழும் எல்லா பிரதேசங்களிலும் கள ஆய்வுகளை மேற்கொண்டு அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தயாரிக்கப்பட்ட கொள்கை ஆவணமும் கோரிக்கைகளும் பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் அதேபோல சபாநாயகரிடமும் கையளிக்கப்பட்டுள்ளன. அதனால் பாராளுமன்றத்தில் விவாத பொருளான ஆதிவாசிகளின் பிரச்சினைகளை காலம் தாழ்த்தாமல் தீர்க்கவேண்டிய தேவை தேசிய அளவில் உணரப்பட்டுள்ளது.**

இது இந்த நாட்டின் ஆதிக்குடிகளின் தீர்க்கப்படாத பாரதூரமான ஒரு பிரச்சினை என்பது தெளிவு. இந்தப் பிரச்சனைக்கு எழுத்து வடிவம் கொடுப்பதில் உள்ள பெரும்சிக்கல் இவர்கள் இந்த நாட்டில் எத்தனை எத்தனை உரிமைகளை இழந்து தவிக்கிறார்கள் என்பதை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

ஆங்காங்கே பேசுபொருளாக இருந்த ஆதிவாசிகளின் பிரச்சினைகள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இடையீட்டால் உரிய தளத்திற்கு நகர்ந்துள்ளது. வடக்கு கிழக்கு வடமத்திய மற்றும் ஆதிவாசிகள் வாழும் எல்லா பிரதேசங்களிலும் கள ஆய்வுகளை மேற்கொண்டு அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தயாரிக்கப்பட்ட கொள்கை ஆவணமும் கோரிக்கைகளும் பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் அதேபோல சபாநாயகரிடமும் கையளிக்கப்பட்டுள்ளன. அதனால் பாராளுமன்றத்தில் விவாத பொருளான ஆதிவாசிகளின் பிரச்சினைகளை காலம் தாழ்த்தாமல் தீர்க்கவேண்டிய தேவை தேசிய அளவில் உணரப்பட்டுள்ளது. வேடுவ தலைவரான ஊருவரிகே வண்ணில எத்தோ ஆதிவாசிகளின் இருப்பு, உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை அங்கீகரித்து அவர்களுடைய இருப்பை பாதுகாப்பதற்காக சட்டங்களை வரைந்து புதிய சட்டம் ஒன்றை கொண்டுவர வேண்டியது காலத்தின் தேவை எனக் கூறினார்.

அதில் வெற்றிக்கனி பறிக்க வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் இந்தக் கருத்தாடல் தொடர வேண்டும். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச நிலையியற் கட்டளை 27/2இன் கீழ் முன்வைத்த கேள்விகளுக்கு ஜனவரி மாதம் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் காலம் கைகூடி உள்ளது. அது பிரதமரோடு நின்று விடாமல் அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டும்.

வண்ணில எத்தோ இது பற்றி கூறுகையில் ஆதிவாசிகளின் பிரச்சினைகளை முறையாக புரிந்துதகொண்டுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பாரிய ஒத்துழைப்பை வழங்கியதாகவும், அதை முடித்து வைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு எனவும் தெரிவித்தார். ஜனாதிபதி இந்த பிரச்சனையைச் சீர்தூக்கிப் பார்த்து தீர்த்து வைக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

– பிரஜை



# இலங்கைவாழ் ஆதிவாசிகளின் அடிப்படை உரிமைகள்

இலங்கைவாழ் மக்கள் சுதந்திர தேசத்தின் காற்றைச் சுவாசிக்கும் 75ஆவது ஆண்டை கொண்டாடும் இத்தருணத்தில், சுதேச மக்களின் உரிமைகளில் நாம் அடைந்துள்ள நிலை பற்றி கவனம் குவிக்கப்படுவதற்கான காலம் கனிந்துள்ளது. சுதேச மக்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயம் 2007 ஆண்டு செப்டம்பர் மாதம் 13 திகதி நிறைவேற்றப்பட்டது. அது நடந்து 15 ஆண்டுகள் கழிந்துள்ளபோதும், அந்த சமவாயத்தின்படி சுதேச மக்களின் இருப்பையும் சுதந்திரத்தையும் அத்தாட்சிப்படுத்துவதற்கான சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள எமது நாடு தவறியுள்ளது. மக்கள் பிரதிநிதிகள், கொள்கை வகுப்பாளர்கள் அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் தீர்மானம் எடுக்கும் நிலையில் உள்ளவர்கள் உட்பட பேராளர்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் ஏனைய தரப்பும் இணைந்து அதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியமும் பொறுப்பும் நம் எதிரே ஊசலாடுகிறது..

சுதந்திரத்தின் 75 வது விழா கொண்டாடப்படும் தருணத்திலும் நாட்டில் வாழும் சுதேச மக்கள்தம் அடிப்படை உரிமைகளைத் துய்ப்பதற்குச் சாதகமான சமூக - பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவு அவர்களுக்கு கிடைத்துள்ளதா என்ற கேள்வி மறையாமல் நிற்கிறது. அவர்களுடைய அடையாளம், சமூக பொருளாதார மற்றும் கலாசார இயக்க நிலைகள் அத்துடன் நடைமுறைகளில் கூர்நோக்கை வெளிப்படுத்தும் சட்டரீதியான அல்லது கொள்கை ரீதியான அங்கீகாரம் கிடையாது. ஆதிவாசிகள் தொடர்ச்சியாக அடக்குமுறை, உதாசீனம் மற்றும் பாரபட்ச வனிப்புக்கும் உள்ளாகும் பாதுகாப்பற்ற சூழ்நிலைமை அண்மைக்காலத்தில் மேலும் தீவிரம் கண்டுள்ளது. தெற்காசியாவில் ஜனநாயகத்தைத் தேர்ந்தெடுத்த மிக பழமையான ஒரு தேசம் என்றவகையில் நாடு எதிர்நோக்கியுள்ள துர்பாக்கியம் என்றே இதனைக் கூற வேண்டும்

இந்நிலையால் சமகாலத்தில் எமது நாட்டில் வாழும் ஆதிவாசி இனக் குழுமங்களின் சமூக - பொருளாதார நிலைமைகள் பற்றிய முறையான அதேபோல் காலத் திருத்தம் செய்யப்பட்ட தரவுகளும் தகவல்களும் எம்மிடம் இல்லை. 1963 பின்னர் செய்யப்பட்ட குடிசன மதிப்பீடுகளில், இனம் எனப் பெறுகின்றன வகைப்படுத்தலில் "வேடுவர்" என்ற அடையாளம் நீக்கப்பட்டதே இதற்கு முக்கிய காரணம்.

***சுதேச மக்களின் இருப்பையும் சுதந்திரத்தையும் அத்தாட்சிப்படுத்துவதற்கான சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள எமது நாடு தவறியுள்ளது.***

சுதேச மக்களின் இருப்பையும் சுதந்திரத்தையும் அத்தாட்சிப்படுத்துவதற்கான சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள எமது நாடு தவறியுள்ளது.

இது அவர்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதி. அதேபோல் தமது கலாசாரத்தைத் துய்ப்பதற்கும் மெருகூட்டுவதற்கும் வாழ்வாதாரத்தில் ஈடுபடுவதற்கும் நடமாட்டத்திற்கும் அதேபோல் தம்மை இந்த தேசத்தின் ஆதிவாசிகள் என அறிமுகம் செய்துகொள்ளும் சுயமாண்பு சந்தித்துள்ள இன்னல்களும் சவால்களும் எண்ணிலடங்காதவை. அனேகமான நிறைவேற்று அல்லது நிருவாக தீர்மானங்களும் சட்ட அமுலாக்க நிறுவனங்களின் செயற்பாடுகளும் இந்நாட்டு ஆதிவாசிகளின் இருப்பிலும் சுதந்திரத்திலும் ஒரு சமூகமாக நாம் எந்தளவுக்கு கூருணர்வை வெளிப்படுத்தி உள்ளம் என்பதை மீண்டும் மீண்டும் மெய்ப்பித்துள்ளன. இந்த நிலை பல தசாப்தங்களாக எமது தேசத்தில் அரங்கேறிக் கொண்டிருக்கும் ஒரு தவறு தொடர்ந்தும் சமூக மயப்படுத்தப்படுவதையே சுட்டுகிறது.

அந்தவகையில், இலங்கைச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள இந்த தவறு சரி செய்யப்படுவதற்கு, சுதந்திரத்தின் 75ஆவது அகவையைக் கொண்டாட தயாராகும் இந்தத் தருணம் மிகப் பொருத்தமானதும் வரலாற்று சிறப்புமிக்க ஒன்றாக இருப்பதாகவே நாம் கருதுகின்றோம். எமது தேசத்தின் ஆதிவாசிகள் என அறியப்படுவோர் காணிகள், நீர் வளம், வன ஜீவராசிகள் அதேபோல அவர்களுடைய வாழ்வியல் சூழல் உட்பட இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் வகிபங்கினை நிறைவேற்ற பொருத்தமானவர்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இதுபோல அவர்களுக்கான முக்கியத்துவத்தை புதிய கோணத்தில் கண்டறியும் பொறுப்பும், வாழ்வுக்கான அடிப்படை உரிமைகளை பரந்துபட்ட கண்ணோட்டத்தில் வியாக்கியானம் செய்து அந்தச் சமூகத்தை வலுப்படுத்தும் பொறுப்பும் நமக்கே உரியது.

ஆதிவாசிகளின் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமுதாயத்தில் உள்ள ஏற்பாடுகளை மதித்து அதற்கான அரசாங்கத்தின் காத்திரத்தை ஏற்றுக் கொண்டு, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 1989-ஆம் ஆண்டு ஆதிவாசிகள் மற்றும் பழங்குடி இன மக்களின் சமுதாயத்தை (ILO Conversation 169) ஏற்று அங்கீகரிக்க அதேபோல், அதற்கு தேவையான அரசியல் கரிசனையை வெளிப்படுத்துவதற்கு இது தக்கதருணம் என்பது எமது ஆழமான நம்பிக்கை.

**லயனல் குருகே**
சிரேஷ்ட ஆய்வாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.

# நுண் நிதிக் கடன்பொறியில் சிக்கியுள்ள ஆதிவாசி பெண்களள்

வெல்லச மற்றும் மின்தென்னே தப்பான பிரதேசத்தை மையமாகக் கொண்டு, தமது பண்பாட்டை பேணிக்காத்துவாறு வனத்தை அண்டி வாழ்ந்த வேடுவ இனம் தமது பூர்வீக நிலங்களை கைவிட்டு செல்வதற்கு திறந்த பொருளாதாரத்தைத் தொடர்ந்து நாட்டில் விரிந்து பரந்த அபிவிருத்தி ஒளிக் கீற்றுகள் காரணமாகின.

அந்த அபிவிருத்தி ஒளிக்கீற்றுகள் வேடுவ மக்களின் பண்பாட்டையும் வாழ்வியலையும் அதேபோல பூர்வீக நிலங்களையும் தீக்கிரையாக்கிய ஒளிப்பிழம்பாக இருந்ததே ஒழிய, அது அவர்களுடைய வாழ்க்கையில் ஒளி ஏற்றவில்லை. அந்த மக்களின் வாழ்வியலை அபிவிருத்தியால் எழுந்த தீப்பிழம்பு சுட்டெரித்துவிட்டது.

எண்ணப்படி சுற்றித் திரிந்த நிலங்கள் சரணாலயங்களாக வனப் பூங்காக்களாக மாற 80களில் வேடுவ மக்கள் அங்கிருந்து பலவந்தமாக விரட்டப்பட்டனர். அதன் பின்னர் வேட்டையாட முடியவில்லை. தேன் எடுக்க முடியவில்லை. வேட்டையாடுதலோடு பின்னிப் பிணைந்திருந்த காணப்பட்ட பல்வேறு கலாசாரம் அம்சங்களும் பூதங்களை வழிபடுதல் போன்ற வழக்காறுகளை கைவிடும் நிலை உருவானது. நீண்ட காலமாக அவற்றைக் கடைப்பிடித்து வந்தாலும், காடுகளை நாடுவதற்கு அரசாங்கத்தில் உள்ள அதிகாரத்தார் கொண்டுவந்துள்ள சட்டதிட்டங்கள் அதற்கு தடையாயிற்று.

இதனால் வேடுவ மக்கள் வாழ்க்கை பிழைப்புக்காக பலதைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம். திம்புலாகல, தளுக்கான இளம் வேடுவ தலைவர் பிழைப்புக்காக கான்கிரீட் தொழில் செய்து வருகிறார். அவருடைய குழுவைச் சேர்ந்த ஏனைய இளைஞர்கள் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகிறார்கள்.

பல சந்ததியினர் வாழ்ந்து வந்த திம்புலாகல பெருங்காட்டின் கற் குகைகளை போதி மாதவனுக்கு அர்ப்பணித்து விட்டு பாரம்பரிய குடியிருப்பையும் வாழ்வியலையும் இழந்து, மலையைத் துறந்துள்ள இந்த மக்கள் எங்கு போவது என்ன செய்வது என்றறியாது கதி அற்றவர்களாக உள்ளனர்.

**கம்பெனி காரர்களுக்கு வசதியான இரை**

அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்தவர்கள் தமது பொறுப்புகளை தட்டிக் கழித்துள்ளதால் வறுமையின் பிடியில் சிக்கியுள்ள வேடுவ மக்களை தமக்கு இரையாக்கிக் கொள்ள இற்றைக்கு பத்தாண்டுகளுக்கு முன்னர் நுண்நிதி கம்பெனிகள் கங்கணம் கட்டிக் கொண்டு களத்தில் குதிக்கின்றன. வேடுவ மக்களை தேடி தொலைதூர குக்கிராமங்கள் வரை செல்லும் இவர்கள் தமது கைவரிசையை காட்டவும் தவறவில்லை. எழுத்தறிவு இல்லாத இந்த மக்களை தமக்கு எளிதில் இரையாக்கிக் கொள்ளலாம் என்பதை உணர்ந்த இந்த கம்பெனிகள் ஹெனானிகல, அம்பாறை பொல்லெபெத்த, கல்வல யாய மற்றும் திம்புலாகல - தளுகான பகுதிகளில் வாழும் வேடுவ மக்களை தந்திரமாக கடன் பொறிக்குள் சிக்க வைத்திருப்பதைக் காணமுடிகிறது.

வன ஒதுக்கங்களுக்குச் செல்ல முடியாததாலும் விவசாயம் செய்வதற்கு வயல் காணிகள் இல்லாததாலும் அவர்களின் பொருளாதாரம் மிகவும் வறுமைப்பட்டுவிட்டது. தேன் எடுப்பதற்கும் காட்டுக் கருணைக் கிழங்குத் தோண்டுவதற்கும் நடவடிக்கைகளில் மென்போக்கு காணப்படுவது ஓரளவுக்கு நிம்மதி தருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். பயிர்ச் செய்வதற்கு ஒரு துண்டு காரணி இல்லாமல் அவதிப்படும் அம்பாறை கல்வலயாய வேடுவ கிராமத்தில் உள்ள பெண்களில் பலரும் நுண்நிதிக் கம்பெனிகளுக்கு இரையாகி உள்ளனர்.

கடன் வழங்கும் உத்தியோகத்தர்கள் நிரப்பி தந்த படிவங்களில் கையொப்பம் இட்டதை மட்டுமே தாங்கள் அறிவோமென வேடுவ பெண்கள் தெரிவிக்கின்றனர்.

30,000 துவாவில் தொடங்கும் குழுக் கடனுக்கு உரிய தவணைப் பணத்தை சில கம்பெனிகள் வாராவாரம் அற விடுகின்றன. இன்னும் சில கம்பெனிகள் மாதா மாதம் அறவிடுகின்றன. படிப்பறிவில்லாத இந்த மக்களின் வாழ்வில் சூழ்ந்து கொண்டுள்ள வறுமையால் இவர்களை எளிதாக இரையாக்க முடிகிறது.

**அந்தப் பெண்ணின் அணியில் உள்ள மற்றவர்களும் கல்வியறிவு இல்லாதவர்கள். கடன் வழங்கும் உத்தியோகத்தர்கள் நிரப்பி தந்த படிவங்களில் கையொப்பம் இட்டதை மட்டுமே தாங்கள் அறிவோமென வேடுவ பெண்கள் தெரிவிக்கின்றனர்.**

பெண்களை மாத்திரம் இலக்குவைத்து கடன் வழங்கும் நுண் நிதி நிறுவனங்களின் முதல் பணி சிறு குழுக்களை அமைப்பது. ஒரே குடும்பத்தவர்களுக்கு கடன்



ஊறுவரிகே அனுலாவதி



ஊறுவரிகே விமலாவதி



வாயடயவரிகே குசுமாவதி



ஊறுவரிகே அனுலாவதி

வழங்க கூடாதென்ற நியதி இருந்தாலும், பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான உதவி என்ற போர்வையில் ஒரே குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் கடன் வழங்கி கிராமிய பெண்களைப் போலவே வேடுவ மக்களையும் கடன் பொறிக்குள் சிக்க வைத்துள்ளனர்.

கடன் வழங்கும் நிறுவனங்கள் முறையான ஆய்வைச் செய்திருந்தால் இதுபோல நோய்வாய்ப்பட்ட நிலையில் உள்ள ஒரு பெண் கடன் உடன்படிக்கையில் கையொப்பம் இட முடியாது. அந்தப் பெண்ணுக்கு தெரிந்தது கையொப்பம் வைப்பது ஒன்று மட்டும்தான். அந்தப் பெண்ணின் அணியில் உள்ள மற்றவர்களும் கல்வியறிவு இல்லாதவர்கள். கடன் வழங்கும் உத்தியோகத்தர்கள் நிரப்பி தந்த படிவங்களில் கையொப்பம் இட்டதை மட்டுமே தாங்கள் அறிவோமென வேடுவ பெண்கள் தெரிவிக்கின்றனர்.

ஹெனானிகல வேடுவ கிராமத்தைச் சேர்ந்த ஊருவரிகே அனுலாவத்தி என்ற பெண் தனது கணவர் மீன் பிடிப்பதற்கான வலை ஒன்றைக் கொள்வனவு செய்ய கடன் பெற்றதாகவும், அந்தத் தொகையை குடும்பத்தின் நுகர்வுத் தேவைகளுக்காக பயன்படுத்தி விட்டதால் கடனைச் செலுத்த முடியவில்லை எனத் தெரிவித்தார்.

ஹெனானிகல நுண் நிதிக் கடன் பொறிக்குள் சிக்குண்ட இன்னுமொரு கிராமம். அந்தக் கிராமத்து தலைவர்களாலும் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை. அந்தக் கிராமத்தில் குடி கொண்டிருக்கும் வறுமையும் பொருளாதார சிக்கல்களும் கடன் பெறுவதற்கு தூண்டுதலாக அமைந்துள்ளன. ஹெனானிகல வேடுவ மக்களில் அனேகமானவர்கள் கடன் பொறிக்குள் கிக்குண்டு காணப்படுகின்றர்.

## தளுகானயில் கடன் பொறி

திம்புலாகல, தளுகான ஆதிவாசிகளும் நுண் நிதிப் பொறியில் சிக்கியுள்ளதாக ஆதிவாசிகளின் தலைவர் தலாவரிகே பிரயந்த தெரிவித்தார். வன ஜீவராசிகள் திணைக்களம் அதேபோல வனப்பாதுகாப்பு திணைக்கள் அதிகாரிகள் காட்டுப்பகுதிக்குள் செல்ல தடை போட்டுள்ளதால் தாங்கள் இந்த கடன் பொறியில் சிக்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## அரசாங்கத்தின் இடையீடு அவசியம்

இலங்கையில் உள்ள ஆதிவாசிகள் நுண் நிதிக் கடன் பொறியில் சிக்குண்டு நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் தேசிய ஒத்துழைப்பு அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் சுரங்க ரூபசிங்க, நுண் நிதிக் கடன் தொல்லை சாதாரண விவசாயிகளை மாத்திரமன்றி நாட்டிலுள்ள வேடுவர்கள் வாழும் குடியிருப்புகளையும் ஆட்கொண்டு அவர்களை வறுமையின் உச்சத்துக்கு இழுத்துச் சென்றுள்ளதாக தெரிவித்தார்.

வேடுவ மக்கள் எதிர்கொண்டுள்ள இந்த கவலைக்குரிய நிலை கவனம் பெறாத ஒன்றாகவே உள்ளது. நஹிர கடல் ஆதிவாசிகளுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க அரசு அதிகாரிகளுடன் பல சுற்று பேச்சு வார்த்தைகளை நடத்திய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. லயனல் குருகே கருத்து தெரிவிக்கையில், ஆதிவாசிகள் விடயத்தில் பின்பற்றப்படும் அரசின் கொள்கையில் அவலநிலையை தென்படுகிறது. ஆவுஸ்திரேலியா அரசாங்கம் அந்நாட்டு பழங்குடி மக்களில் கொண்டுள்ள கரிசனையையும் கண்ணியத்தையும் பார்க்கும்போது என்பவர்களுக்கு அந்த வரப்பிரசாதம் இல்லையென்பதையே அது காட்டுகிறது.

**லக்மால் பதுகே**

01 ஆம் பக்கத் தொடர்ச்சி

## பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை

பிரச்சனைகள், காட்டு யானைகளின் தொல்லை அதேபோல காட்டுக்குச் செல்வதற்கு அனுமதி மறப்பது போன்ற பிரச்சினைகளைக் குறிப்பிட்டிருந்தோம். எம்மவர்கள் காட்டின் ஊடாக மீன்பிடிக்கச் சென்றால் பிடித்து அபராதம் விதிக்கிறார்கள்.

நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் தலதா மாளிகைக்கு தேனை காணிக்கையாக கொடுப்பதுண்டு. தேன் எடுக்க காட்டுக்குச் செல்ல வேண்டும். வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் அதற்கு அனுமதி இல்லை. தலதா மாளிகைக்கு கொண்டு செல்ல திருட்டுத்தனமாக தேன் எடுக்க வேண்டியுள்ளது. அப்படி செல்லும்போது பிடிபட்டுக் கொண்டால் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி அபராத விதிப்பார்கள்.

எவராலும் எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை. கலாசார இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மனிதம் தெரிந்தவர். ஆனால், அவரால் இதனை தனியாக செய்ய முடியாது. ஜனாதிபதியும் அரசாங்கமும் தான் இவற்றைத் தீர்த்து வைக்க வேண்டும். ஆனால் நடப்பவற்றை பார்த்தால் அவர்களுக்கு அந்தத் தேவை இல்லை போலும். எதிர்க்கட்சி தலைவர் நாடாளுமன்றத்தில் இது பற்றி பேசியுள்ளார். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அவராலும் இதைத் தீர்க்க முடியாது. இது இப்படியே தொடருமானால் ஆதிவாசிகள் என்ற இனம் அழிந்து போய்விடும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சமகாலத்தில் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி சிரத்தையுடன் செயல்படுகிறது. அரசாங்கத் தரப்பிலிருந்து இதுவரை எந்த தீர்வும் இல்லை.

**ஆதிவாசிகளின் பிரச்சினைகள் தொடர்பாக 2023 ஜனவரி 18–ஆம் தேதி எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச நிலையற்ற கட்டளை 27/2 கீழ் முன்வைத்த கேள்வியும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சராக கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வழங்கிய பதிலும் இதில் அடங்கும். தற்போது 9 மாதங்கள் கடந்துள்ள நிலையில் ஆதிவாசிகளின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளனவா?**

# விழலுக்கு நீர் இரைத்தல்




- ***சஜித் பிரேமதாச***

கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே! உலகெங்கிலும் வாழ்கின்ற ஆதிவாசிகளின் உரிமைகள் ஐக்கிய நாடுகளின் பிரகடனம் ஊடாக சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், நமது நாட்டில் பல பிரதேசங்களில் வாழ்ந்து வரும் ஆதிவாசிகள் சமகாலத்தில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ளனர்.

கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே எமது நாட்டில் ஆதிவாசிகள் வாழ்ந்து வருகின்ற மாவட்டங்கள், பிரதேச செயலகங்கள், கிராம அலுவல் அலுவலர் பிரிவுகள், கிராமங்களில் எத்தனைப் பேர் வாழ்கிறார்கள். அதேபோல், குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பது பற்றி புள்ளிவிபர திணைக்களத்திற்குச் சரியாக தெரியாது. அதற்காக நாம் அனைவரும் ஒரு நாடு என்ற வகையில் வெட்கப்பட வேண்டும். நான் இங்குள்ள எவரையும் குறை கூறவில்லை. பிரதமரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைக்க விரும்புகிறேன். குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கு உடனடியாக இதை ஆராயுமாறு உத்தரவிடுங்கள். ஆதிவாசிகளின் குடும்பங்களின் எண்ணிக்கை, மக்கள் தொகை எவ்வளவு, எந்தெந்த பிரதேசங்களில் எக் கிராமத்தில் அவர்கள் வாழ்கிறார்கள் என்ற சரியான தரவுகளை நிரல் படுத்துமாறு உடனடியாக உத்தரவிடுங்கள்.

நாட்டில் நடைமுறையில் உள்ள பல்வேறு சட்டங்கள் அதேபோல ஒழுங்கு விதிகளால் ஆதிவாசிகளின் உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆதிவாசிகளின் பாரம்பரிய வாழ்க்கைக் கோலத்திற்கு இடையூறாக அமைகின்ற அத்தகைய சட்டங்களையும் கட்டளைச் சட்டங்களையும் திருத்தியமைத்து அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் புதிய சட்டங்களைக் கொண்டு வருவதில் விசேட கவனம் செலுத்த வேண்டி உள்ளது.

அதன்படி, இதனை தேசிய அளவில் முக்கியத்துவம் பெறுகின்ற ஒரு விடயமாக கருதி பின்வரும் கேள்விகளுக்கு சரியான பதிலையும், தெளிவுப்படுத்தலையும் அரசாங்கம் முன் வைக்குமென எதிர்பார்க்கின்றேன்.

- **நாட்டில் வாழும் ஆதிவாசிகளின் பொருளாதார, சமூக, கலாசார, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நியமமான சட்டங்களை அரசாங்கம் வகுக்க வேண்டும் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா?**

அவ்வாறு ஏற்றுக் கொள்ளுமானால் ஆதிவாசிகளின் மரபுகள் மற்றும் கலாச்சாரம் பேணப்படும் வகையில் புதிய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் முன்னிலைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அவ்வாறு இல்லாவிட்டால், அரசியலமைப்பு ஊடாக ஆதிவாசிகளை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அதேபோல் ஆதிவாசிகளின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக மாகாண அரசாங்கங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் நியதிச் சட்டங்களையும், துணை விதிகளையும் தயாரிக்க வேண்டும். அரசாங்கம் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு? அதற்குரிய திட்டவட்டமான ஒரு காலப் பகுதியைத் தெரிவிக்க முடியுமா? அவ்வாறு இன்றேல், ஏன்?

ஆதிவாசிகள் மற்றும் பழங்குடி சமவாயத்திற்கு வட்ட வலிதினை ஏற்படுத்தி முறையான ஒரு வேலைத்திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்த வேண்டியது துரிதமான தேவை என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது?

அவ்வாறாயின், நாட்டிலுள்ள ஆதிவாசிகள் மற்றும் பழங்குடி சமுதாயத்தை ஏற்று அங்கீகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அரசாங்கம் திட்டவட்டமான எக்கால பகுதியில் அதனை நடைமுறைப்படுத்தும்?

***நாட்டில் நடைமுறையில் உள்ள பல்வேறு சட்டங்கள் அதேபோல ஒழுங்கு விதிகளால் ஆதிவாசிகளின் உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆதிவாசிகளின் பாரம்பரிய வாழ்க்கைக் கோலத்திற்கு இடையூறாக அமைகின்ற அத்தகைய சட்டங்களையும் கட்டளைச் சட்டங்களையும் திருத்தியமைத்து அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் புதிய சட்டங்களைக் கொண்டு வருவதில் விசேட கவனம் செலுத்த வேண்டி உள்ளது.***

கௌரவ பிரதமர் அவர்களே!

ஆதிவாசிகளைப் பேணிப் பாதுகாக்கும் International convention's

- **ஆதிவாசிகள் மற்றும் புழங்குடி சமவாயத்திற்கு வட்ட வலிதினை ஏற்படுத்தி முறையான ஒரு வேலைத்திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்த வேண்டியது துரிதமான தேவை என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது?**

அவ்வாறாயின், நாட்டிலுள்ள ஆதிவாசிகள் மற்றும் பழங்குடி சமுதாயத்தை ஏற்று அங்கீகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அரசாங்கம் திட்டவட்டமான எக்கால பகுதியில் அதனை நடைமுறைப்படுத்தும்?

கௌரவ பிரதமர் அவர்களே!

ஆதிவாசிகளைப் பேணிப் பாதுகாக்கும் International convention's காணப்படுகின்றன. International protocols காணப்படுகின்றன. International protocols காணப்படுகின்றன. 2007இல் ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் United nations declaration of the rights of Indigenous – UNDRIP சமவாயம் நிறைவேற்றப்பட்டுள்ளது. UNDRIP இன் 42வது சரத்து மூலம், அனேகமான நாடுகள் அதனை முழு அளவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை 2007 இல் ஏற்றுக்கொண்டுள்ளன.

அவ்வாறாயின், எமது நாட்டில் ஆதிவாசிகள் மற்றும் பழங்குடி மக்கள் சமுவாயத்தை ஏற்று அங்கீகரிக்க – ratify – அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமா? எதிர்க்கட்சியின் முழுமையான ஒத்துழைப்பையும் பக்கபலத்தையும் வழங்க தயாராக உள்ளோம். எத்திகதியில் இது செயல்வடிவம் பெறும்?

- **ஆதிவாசிகளின் பாரம்பரிய இருப்பிடங்கள் மற்றும் அவர்களுடைய வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட சில செயற்பாடுகள் தாவர மற்றும் விலங்கின பாதுகாப்பு கட்டளைச் சட்டம், வனப்பாதுகாப்பு கட்டளைச் சட்டம், கரையோர பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றினால் குற்றச் செயல்களாக பொருளகோடல் வழங்கப்பட்டுள்ளது அரசாங்கத்திற்கு தெரியுமா?**

அவ்வாறாயின் ஆதிவாசிகளுக்கு அநீதி ஏற்படாத வகையில் அவ்வாறான சட்டங்களை சட்டங்களில் திருத்தம் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

அவர்களுடைய பாரம்பரிய காணிகளின் உரித்து சம்பந்தப்பட்ட பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

- **நாட்டிலுள்ள ஆதிவாசிகள் எதிர்நோக்கி வருகின்ற சவால்களை ஆராய்வதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆதிவாசிகள் மற்றும் அரசு பணியாளர்களைக் கொண்டமைந்த "ஆதிவாசிகளின் உரிமைகள் பற்றிய சுயாதீன குழு ஒன்றையும்" "பாராளுமன்ற உபகுழு" ஒனன்றையும் நியமிக்குமாறு ஆதிவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கௌரவ பிரதமர் அவர்களே! ஆதிவாசிகள் அவர்களுக்கே உரிய பாராளுமன்ற உபகுழு ஒன்றை அமைக்குமாறு கோரியுள்ளனர். நான் உங்களிடம் கேட்பது என்னவென்றால் ஆதிவாசிகளின் உரிமைகள் பற்றிய சுயாதீன குழு மற்றும் விடயத்தையொட்டிய துறைசார் மேற்பார்வைக் குழு ஒன்றின் கீழான பிரத்தியேகமான குழு ஒன்றை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? எத்திகதியில் அந்தப் பணி முன்னெடுக்கப்படும்

- **ஆதிவாசிகளின் பாரம்பரிய வாழ்வாதாரம் அதனோடு இணைந்த நடவடிக்கைகள் குற்றச் செயல்களாக கருதப்படுகின்ற பின்னணியில், அதேபோல் பாரம்பரிய இருப்பிடங்களை இழந்துள்ளதன் காரணமாகவும் இருப்பிடங்களை அமைத்துக் கொள்வதற்கு அனேகமான ஆதிவாசிகள் நுண்நிதி கடன் பெற தலைப்பட்டுள்ளனர்.**

அவ்வாறு கடன் பெறும்போது தெளிவற்ற கடன் நிபந்தனைகள், அதிக வட்டி வீதம், சட்டவிரோதம் மற்றும் அநாகரிக முறையில் அறவீடு போன்றவற்றால் அவர்கள் சுரண்டப்படுவது சமகாலத்தில் பிரச்சனைகளை தோற்றுவித்துள்ளது. காணிகள், வாழ்வாதாரம், அடையாளம் மற்றும் கலாச்சாரம் என்பன சிக்கலானதாகவும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. அவற்றைக் கூறுபோட முடியாது. ஆகவே, ஆதிவாசிகள் நுண்நிதிக் கடன் பிரச்சனையைத் தீர்க்கும்போது இவ்வாறான பல பிரச்சினைகளை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அவர்கள் எதிர்நோக்கியுள்ள இந்த நுண்நிதி நெருக்கடியை தீர்த்து வைக்க அரசாங்கம் கவனம் செலுத்துமா?



புகைப்படம் ft.lk

**விதுர விக்ரமநாயக்க புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்**

எதிர்க்கட்சி தலைவர் பாராளுமன்ற நிலையக் கட்டளை 27 (2) இன் கீழ் முன்வைத்துள்ள ஒவ்வொரு கேள்விக்குமான பதிலை எளிமையாகச் சொல்வதானால் ஆம். அது அப்படியே என்றாலும் அவர் விரிவான ஒரு பதிலை எதிர்பார்க்கிறார். நாங்கள் அந்த பதிலை வழங்க தயார்

அவருடைய கேள்விகளுக்கான விரிவான பதில்கள்

- **ஆம். ஆதிவாசிகளின் சமூகப், பொருளாதார, கலாசார சிவில் மற்றும் அரசியல் அதேபோல் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் மேலும் ஆராய்ந்து தேவைக்கு ஏற்றவாறு புதிய சட்ட வரைவுகள் அல்லது உள்ள சட்டங்களில் திருத்தம் கொண்டுவரும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

திட்டவட்டமான ஒரு காலப்பகுதியைச் சொல்வதானால் ஆறு மாத காலத்தினுள் அனைத்தையும் நிறைவு செய்து பாராளுமன்றத்தில் முன்னிலைப்படுத்தி சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்ள அல்லது சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர எதிர்பார்க்கின்றோம்.

- **ஆம். தனித்துவமான தேவைகளைக் கொண்ட மக்கள் சமூகத்தின் மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான பிரிவு ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ளது. அதில் ஆதிவாசிகள் மாத்திரமின்றி இன்னும் பல குழுக்களும் உள்ளன. அந்தச் சிறிய குழுக்கள்**

**தனித்துவமான அடையாளங்களை கொண்டுள்ள, தனித்துவமான கலாசார பண்புகளுடனான எல்லா குழுக்களினதும் மரபுரிமைகளைப் பாதுகாப்பதுடன் அந்தந்த குழுக்களின் எதிர்கால சந்ததியினருக்கு இந்த நாட்டின் ஏனைய மக்கள் அனுபவிக்கின்ற எல்லா வரப்பிரசாதங்களையும் உரிமைகளையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்திற்காக நாங்கள் இந்தப் பிரிவை ஆரம்பித்துள்ளோம்.**

அரசாங்கம் என்ற வகையில் தேசிய கொள்கை ஒன்றை அமைத்து இவற்றைச் செயல்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இலங்கையில் வாழும் ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கொள்கையை வகுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை கூறி வைக்கின்றேன்

***அரசாங்கம் என்ற வகையில் தேசிய கொள்கை ஒன்றை அமைத்து இவற்றைச் செயல்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இலங்கையில் வாழும் ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கொள்கையை வகுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை கூறி வைக்கின்றேன்.***

**a)** அதன்படி ஆதிவாசிகளின் கோரிக்கைகளையும் தேவைகளையும் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சில் தனித்துவமான அடையாளங்களைக் கொண்டுள்ள மக்களின் மரபுரிமை பாதுகாப்புப் பிரிவு என்ற பெயரில் பிரிவொன்றை அமைத்துள்ளோம். அது ஆதிவாசிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக சம்பந்தப்பட்ட ஏனைய திணைக்களங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி பணிகளை மேற்கொண்டுள்ளது. அந்த விபரங்கள் ஓர் அறிக்கையாக இணைப்பு ஒன்றில் தரப்பட்டுள்ளன.

**b)** ஆதிவாசிகளின் கிராமங்களுக்குச் சென்று அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடி தீர்வுகள் குறித்து ஆராய்தல்.

(அது சம்பந்தப்பட்ட அறிக்கை இணைப்பு இரண்டாக தரப்பட்டுள்ளது.)

**c)** சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்களும் ஒன்றிணைந்து தொழிற்பாட்டு குழு ஒன்றை அமைத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து கலந்து ஆலோசித்தல்.

(அது சம்பந்தப்பட்ட அறிக்கை இணைப்பு மூன்றாக தரப்பட்டுள்ளது.)

- **ஆம். இந்தச் சட்டங்களில் திருத்தங்களை கொண்டுவர சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

ஆதிவாசிகளுக்குச் சொந்தமான பாரம்பரிய காணிகளின் உரித்தை மீண்டும் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவற்றுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களான காணி அமைச்சு, வன ஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு, கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றோடு பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களின் பாரம்பரிய காணிகளை மீண்டும் அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதை இந்த உயரிய சபையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

- **ஆம். பாராளுமன்ற ஆலோசனை குழுவின் உபகுழு ஒன்றை அமைக்க எதிர்பார்க்கின்றேன். அடுத்த ஆலோசனை குழுக் கூட்ட அமர்வின்போது அந்த உப குழு நியமிக்கப்படும்.**
- **ஆம். நிதி அமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தி இதற்கு சலுகை வழங்கும் ஒரு திட்டத்தை ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றேன். தீர்க்கப்படாத பிரச்சனைகள் பல்வேறு அரசாங்கங்களால் புறக்கணிப்புக்கு உள்ளாகி இருப்பது தெளிவு. சிரமமாகவும் உரிய வழிமுறையைப் பின்பற்றியும் இந்தப் பிரச்சனைகளையும் சிக்கல்களையும் தீர்த்துக் கொள்ள வேண்டும். இதுவரை காலம் இடம் பெற்றதுபோல விழலுக்கு நீர் இரைக்கப்படாது. மக்களின் பணம் முறையாக செலவு செய்யப்படும். அதனை சாத்தியமாக்கி கொள்ள மாண்புமிகு எல்லா உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் எதிர்பார்க்கின்றேன்.**



புகைப்படம் mfa.gov.lk

**பிரதமர் தினேஷ் குணவர்தன**

அரசாங்கம் என்ற வகையில் தேசிய கொள்கை ஒன்றை அமைத்து இவற்றைச் செயல்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இலங்கையில் வாழும் ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கொள்கையை வகுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை கூறி வைக்கின்றேன். சுதந்திர தின விழாவின் சிறப்புப் பிரதிநிதிகளாக ஆதிவாசிகளின் தலைவர்களைக் கலந்துகொள்ளுமாறு நான் அழைப்பு விடுத்தேன். அவர்கள் அந்த அழைப்பை அன்போடு ஏற்றுக் கொண்டார்கள். நாடாளுமன்றம் என்ற வகையிலும் அரசாங்கம் என்ற வகையிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என மாண்புமிகு அமைச்சர் உறுதி அளித்தார். அவற்றை நடைமுறைப்படுத்த நாம் நடவடிக்கை எடுப்போம் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். நாடாளுமன்றம் என்ற வகையில் அதையொட்டிய விசேட பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க எதிர்பார்க்கின்றேன்.

**ரிரான் பங்ககமஆரச்சி**



# மண்ணின் மரபுரிமைக் காத்தல்

ஆதிவாசிகள் எமது நாட்டில் சிறுபான்மை இனமாக இருப்பதால் பாரதூரமான பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் அவர்கள் பெரும்பாலும் இனம், கலாசாரம் மற்றும் மொழி ரீதியாக பாரபட்ச கவனிப்புக்கு உள்ளாகின்றனர், இதனால் சமுதாய ரீதியாக ஒதுக்கப்படுதல், பொருளாதார பிரதிகூலங்கள் மற்றும் அரசியல் ரீதியாகவும் அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர், எமது நாட்டில் வறுமையில் வாழ்பவர்கள் மத்தியில் முதலாவது நிலையில் வைத்து நோக்கப்படுபவர்களாகவும் காணப்படுகின்றனர். பாரபட்ச கவனிப்பு, கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கான அணுக்கம் இல்லாமை காணி பறிப்பு உட்பட பல விடயங்கள் இதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

பல நூற்றாண்டுகளாக ஆதிவாசிகளின் பூர்வீக காணிகள் பறிக்கப்பட்டுள்ளன. இது அவர்களுடைய கலாசாரம். பொருளாதாரம் மற்றும் வாழ்வியலில் அழிவை உண்டு பண்ணும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஆதிவாசிகளின் பூர்வீக காணிகள் இயற்கை வளங்களை நிரம்ப பெற்றவை அந்த வளங்களை அரசாங்கமும் தனியார் கம்பெனிகளும் சுரண்டுவதை பரவலாக அவதானிக்க முடிகிறது. இது பூர்வீகத்தில் மாற்றத்தை கொண்டு வருவது போலவே

**ஆதிவாசிகளின் பூர்வீக காணிகள் இயற்கை வளங்களை நிரம்ப பெற்றவை அந்த வளங்களை அரசாங்கமும் தனியார் கம்பெனிகளும் சுரண்டுவதை பரவலாக அவதானிக்க முடிகிறது. இது பூர்வீகத்தில் மாற்றத்தை கொண்டு வருவது போலவே ஆதிவாசிகளின் இடப்பெயர்வுக்கும் முக்கிய பங்கு வகிக்கின்றது.**

ஆதிவாசிகளின் இடப்பெயர்வுக்கும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இதனால் ஆதிவாசிகள் அரசாங்கம் அதேபோல பாதுகாப்புத் துரையின் வன்முறைகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் இரையாகி விடுகின்றனர்.

ஆதிவாசிகளின் பூர்வீக காணிகள் இயற்கை வளங்களை நிரம்ப பெற்றவை அந்த வளங்களை அரசாங்கமும் தனியார் கம்பெனிகளும் சுரண்டுவதை பரவலாக அவதானிக்க முடிகிறது. இது பூர்வீகத்தில் மாற்றத்தை கொண்டு வருவது போலவே ஆதிவாசிகளின் இடப்பெயர்வுக்கும் முக்கிய பங்கு வகிக்கின்றது

ஆதிவாசிகள் எதிர்நோக்கும் காணி பிரச்சனை பாரதூரமான பல பிரச்சினைகளுக்கு கதவுகளைத். திறக்கின்றது. பல வருடங்களாக உலர் வலயத்தில் வாழ்ந்த இவர்கள் கால்நடைகளையும் காணிகளையும் நம்பி இருந்தனர். ஆனால் காணிகளுக்கு சட்டரீதியான உரித்து இல்லை. பாரம்பரியமாக அவர்களுக்குரிய காணிகளில் வாழ்ந்து வந்தாலும் அந்தக் காணிகள் அவர்களுக்குச் சொந்தமில்லை. இதனால் அவை அரசாங்கம் மற்றும் தனியார் வர்த்தகர்களுக்கு இரையாக மாறும் நிலை உருவாகியுள்ளது. நீர்ப்பாசன திட்டங்கள், அதேபோல தேசிய வனப்பூங்கா திட்டங்களுக்காக அரசாங்கம் உலர் வலயத்தில் அதிகளவான காணிகளை கையகப்படுத்தியுள்ளது. இதனால் ஆசிகளுக்கு தமது பூர்வீக காணிகளிலிருந்து இடம்பெயர வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்த கெடுபிடி அரசாங்கத்தால் மாத்திரமன்றி தனியார் வர்த்தகர்களாலும் அரங்கேற்றப்படுகிறது. அதற்கு காரணம் அந்தப் பிரதேசங்கள் சுற்றுலாத் துறைக்கு உகந்த நிலையில் காணப்படுகின்றன.

தொடர்ச்சியான வறட்சியால் பாதிக்கப்படும் இந்த மக்கள். கால்நடைகளைப் பராமரிப்பதில் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனால் காணிகளைத் தேடி வேறு பிரதேசங்களுக்கு படையெடுக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. சமூக மற்றும் கலாசார வாழ்க்கைக் கோலத்தைச் சீர்குலைத்து விடுகிறது. இதனால் அவர்கள் வருமானத்தைத் தேட குறைந்த ஊதிய தொழில்களை நாடும் நிலை உருவாகியுள்ளது

# ஆதிவாசிகளின் எல்லா பிரச்சினைகள் பற்றியும் பிரதமருக்கு தெரியப்படுத்தி உள்ளோம்

நிஷாந்தி ஜயசிங்க
மேலதிக செயலாளர்
அபிவிருத்தி மரபுரிமை



- **சமகாலத்தில் ஆதிவாசிகள் பல பிரச்சனைகளை எதிர்கொள்கிறார்கள். அதில் வீட்டு பிரச்சனை முக்கியமானது. ரத்துகல போலவே வாகரை ஆதிவாசிகளும் நிரந்தர வீட்டுத் திட்டம் ஒன்றை ஏற்கனவே கோரி உள்ளனர். அதற்கான நகர்வுகள் எந்த மட்டத்தில் உள்ளன?**

ஆதிவாசிகள் விவகாரம் எங்களுடைய அமைச்சுக்கு உரியதாக இருந்தாலும் அவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு வேறு அமைச்சுகள் ஊடாகவே தீர்வுகளைத் தேட வேண்டும். வீட்டுப் பிரச்சனையைத் தீர்க்கும் பொறுப்பும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு உரியது. NH/P&D/06/28 இலக்க, 2022.09.12 திகதி கடிதத்தில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு கோரியுள்ளோம். அதற்கான பதிலாக அனுப்பி வைக்கப்பட்டிருந்த MSUP/P&M/P/S/2022 இலக்க 2022.10.10 திகதி கொண்ட கடிதத்தில் அந்த பிரச்சினைகளுக்கு துரிதமாக தீர்வுகள் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **வீட்டுப் பிரச்சினை போலவே குடிநீர் வசதி பிரச்சனையும் பாரதூரமாக உள்ளது. வாகரை அதேபோல ரத்துகல ஆதிவாசிகள் குடிநீர் இன்மையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

இதனைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு நீர் வழங்கள் அமைச்சுக்கு உள்ளது. மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்குமாறு 2022.09.16 எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு பதில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ள நீர் வழங்கள் அமைச்சு (2022.10.07) துரித நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்துள்ளது.

- **2022இல் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டில் வேடுவர்கள் வேறோர் இனமாக கருதப்பட்டுள்ளனர். அது பற்றிய உங்கள் கருத்து?**

இந்தச் சமூகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகள் அதைப்போல அபிவிருத்தி தேவைப்பாடுகள் ஒருபுறம் இருக்க, அவர்கள் வேறோர் இனமாக கருதப்பட்டுள்ளமை குறித்து இடையீடு செய்யுமாறு குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கு 2022.09.16 திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான பதில் கடிதத்தில் "2024 குடிசன, வீட்டு கணக்கெடுப்பு வினாகொத்துபடி போதிய தரவுகள் கிடைக்கப்பெற்றால் உரிய தகவல்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **தம்பான ஆதிவாசிகள் கிராமத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. அவை உங்களுடைய அமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி கூற முடியுமா?**

ஆம்! அங்கு பல பிரச்சினைகள் உள்ளன. பாலங்கள் மற்றும் பாதைகளை அமைத்தல் அதேபோல புனர்நிர்மாணப் பணிகளில் இடையீடு செய்யுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கைப் போக்குவரத்து சபை ஆகிய நிறுவனங்கள் தான் இவற்றைத் தீர்க்க வேண்டும். பிரச்சினைகளை எழுத்து மூலம் அந்தந்த நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தி உள்ளோம். நடவடிக்கை எடுப்பதாக பதிலும் கிடைத்துள்ளது.

- **வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் வேடுவர் தலைவன் ஊருவரிகே வண்ணில எத்தோ இடையில் 2011 ஜூலை மாதம் நிறைவேற்றப்பட்ட புரிந்தர்வு உடன்படிக்கையின் சரத்துகள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளனவா?**

ஆதிவாசிகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி தேவைப்பாடுகளில் வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் வேடுவர் தலைவன் ஊருவரிகே வண்ணில எத்தோ இடையில் நிறைவேற்றப்பட்ட புரிந்தணர்வு உடன்படிக்கையை சட்டமாக்குதல், வலைவீசி மீன்பிடித்தல், காட்டு யானைகளின் அச்சுறுத்தல், அன்றாடங்களுக்கு அயலிலுள்ள காட்டுக்குச் செல்ல அனுமதித்தல், மாதிரி வேடுவர் கிராமம் அமைத்தல், பயிற்சி மையம் ஒன்றை அமைக்கும் விடயத்திலும் இடையீடு செய்யுமாறு வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்கு NH/P&D/06/28 இலக்க மற்றும் 2022.09.16 திகதி கொண்ட கடித மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் கிடைத்துள்ள பதில் கடிதத்தில் மாதுரு ஓயா நீர்த் தேக்கத்தில் மீன்பிடிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளபோதும் அதற்கு உரிமம் பெற எந்தவொரு ஆதிவாசியும் விண்ணப்பம் செய்யவில்லை எனவும்,. காட்டு யானைகளால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கு மின்சார வேலி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாதுரு ஓயா தேசிய பூங்காவில் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது, ஹெனானிகல தீவில் பயிற்சி மையம் அமைப்பதற்கு தாவர, விலங்கின பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின்படி அனுமதி வழங்க முடியாது எனவும், தேசிய மரபுரிமைகள் அமைச்சினால்

நிர்மாணிக்கப்பட்டுள்ள கலாசார மையம் அதற்கு பொருத்தமானது எனவும், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் 2023.04.25 திகதி எழுத்து மூலம் தெரியப்படுத்தி உள்ளது.

- **ஆதிவாசி ஜனஉரும விகாரையின் பிக்குமார் தங்குமிட மனை, தியான மண்டபம் போன்றவற்றுக்கு எல்லைச் சுவர் அமைப்பது நீண்ட கால கோரிக்கை என்பதை அறிவீர்களா?**

ஆதிவாசி ஜனஉரும விகாரையின் தங்குமிட மனை, தியான மண்டபம் போன்றவற்றுக்கு எல்லைச் சுவர் அமைக்கும் பணி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு உரியது. 2022.09.16 திகதி கொண்ட கடிதத்தில் நாங்கள் மீண்டும் இது பற்றி ஆராய்ந்தபோது தேசிய பௌதீக திட்ட திணைக்களம் பிக்கு தங்குமிட மனையை அமைக்க 133,590,000.00 ரூபா, தியான மண்டபத்தை அமைக்க 44,286,000.00 ரூபா, சுற்றுமதில் அமைக்க அடிக்கு தலா 950.00 ரூபா அவசியம் என்பதை தெரிவிக்கும் மதிப்பீடு ஒன்றை NPPD/LPP/JANAPUMA/01 இலக்கம் கொண்ட 2023.11.10, 2023.12.23 திகதி கொண்ட கடிதங்கள் வாயிலாக அறிவித்துள்ளது.

வருடாந்த ஆதிவாசி தினக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்தல், தலதா மாளிகையில் தேன் காணிக்கை பூஜை ஏற்பாடுகளை செய்தல், தம்பான மற்றும் ஹெனானிகல சாந்தி கர்ம நிகழ்வை ஏற்பாடு செய்தல் போன்ற தனித்துவமான கலாசார அம்சங்களுக்கு இந்த அமைச்சு ஆண்டுதோறும் நிதியினை ஒதுக்கி வருகிறது. புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு என்ற வகையில் இந்த பணிகளை நாங்கள் செய்து வருகிறோம்.

அதேபோல் தம்பான அரும்பொருட் காட்சியகத்தை விருத்தி செய்தல், அங்குள்ள பதவி அணியினருக்கு சம்பளம் வழங்குதல். பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் என்பவற்றிற்கு அமைச்சின் நிதி பயன்படுகிறது. அரும்பொருட் காட்சியகத்தின் கூரையை புனர்நிர்மாணம் செய்வதற்கு மையங்கன பிரதேச செயலகத்திலிருந்து ரூபாய் 486,663.17 மதிப்பீடு பெறப்பட்டுள்ளது

- **ஆதிவாசிகள் மத்தியில் ஒற்றுமை இன்மை, இளவயது திருமணம் இரட்டைத் திருமணம் மற்றும் பாடசாலை பிள்ளைகளுக்கு முறையாக கல்வி வாய்ப்பு இன்மை, இவை தளுகான ஆதிவாசிகள் கிராமத்தில் பரவலாக தென்படுகின்ற பிரச்சினைகள் அல்லவா?**

ஆம்! தளுகான ஆதிவாசிகள் கிராமத்தை மையமாக கொண்டு சமூக உயிர்ப்பூட்டல் திட்டம் நடத்தப்பட்டுள்ளது. அதில் பொருளாதார நெருக்கடிகள் காணப்படுகின்றன குடும்பங்களைச் சேர்ந்த 85 பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. எதிர்காலத்தில் எல்லா கிராமங்களிலும் சமூக உயிர்ப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த திட்டமிட்டு வருகிறோம். அதனூடாக ஏனைய பிரச்சனைகளைத் தீர்க்க எதிர்பார்க்கின்றோம்.

- **வேடுவர்களின் முக்கிய தொழிற்பாடுகளான தேன் எடுத்தல் மற்றும் பழம் பறித்தலுக்கு திம்புலாகல மலை சார்ந்த காட்டுப் பகுதிக்குச் செல்ல தளுகா ஆதிவாசிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதே?**

இது வனப்பாதுகாப்புத் திணைக்களத்துடன் பேசித் தீர்க்க வேண்டிய ஒரு விடயம். நாங்கள் இது பற்றி அவர்களோடு பேசுவோம். அடையாளம் காணப்பட்ட ஒரு சிலருக்கு ஒதுக்க காட்டுப்பகுதிக்குள் செல்ல விசேட அடையாள அட்டை ஒன்றை வழங்க முயற்சி எடுத்து வருகிறோம்.

- **ஒரு சில ஆதிவாசிகளின் பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லை. இதுபரதாரமானதுதானே?**

அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பிள்ளைகள் பற்றிய காலதிருத்தம் செய்யப்பட்ட அறிக்கைகளைப் பெற்று பிறப்புச் சான்றிதழை வழங்கும் நிகழ்ச்சி திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- **பொல்லேபெத்த ஆதிவாசி குடியிருப்புகளுக்கென்று திட்டவட்டமாக ஒதுக்கப்பட்ட ஓர் இடம் இல்லை. அதேபோல சீரழிந்து வருகின்ற கலாசார மையத்தை வருமானத்தை உற்பத்தி செய்யும் இடமாக மாற்ற முடியாதா?**

முடியும். சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை இலக்காக கொண்டு றம்பகென் ஓயா நீர்தேக்கத்திற்கு அருகாமையில் ஆதிவாசிகளின் கலாசார மையத்தை ஒட்டிய காட்டுப்பகுதியில் உள்ள கட் குகைகளை முதன்மைப்படுத்தி மாதிரி ஆதிவாசிகள் கிராமம் அமைப்பதற்கும், சுற்றுலா முகவர்கள் ஊடாக அப்பிரதேசத்தை சுற்றுலா ஈர்ப்பு கொண்டதாக மாற்றுவதற்குள்ள வாய்ப்புகளை ஆராய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் ஒத்துழைப்பும் கிடைக்கின்றது.

- **ரத்துகல ஆதிவாசி கிராமத்தில் கடுக்காய், தான்றி, நெல்லி போன்ற மூலிகைகள் அதிகம் உள்ளன. இவற்றை நேரடியாக விற்பனை செய்யும் ஒரு வழிமுறையை ஆக்குவது கடினமானதா?**

மூலிகைப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு ஏற்கனவே கொள்கலன்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மூலிகைப் பொருட்களை சேகரிக்கும் நிலையம் ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளோம். அப்போது நேரடியாக கொள்வனவு செய்யலாம். இவற்றுக்கு மேலதிகமாக மூலிகை வளர்ப்புக்குத் தேவையான கன்றுகளையும் தொழில்நுட்பத்தையும் வழங்க ஆயுர்வேத திணைக்களத்துடன் இணைந்து செயல்படுகிறோம்.

- **அழிந்து வரும் வேடுவ மொழியை காப்பாற்றுவதற்கு உங்கள் அமைச்சின் வேலைத்திட்டம் என்ன?**

ஒரு சில ஆதிவாசிகள் கிராமத்தில் இப்பிரச்சனை அதிகமாக உணரப்படுகிறது. ரத்துகல ஆதிவாசிகள் கிராமம் அப்படியான ஒன்று. அங்குள்ள பிள்ளைகளுக்கு வேடுவ மொழியை போதிக்கும்

வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அந்தப் பணிக்காக ரூபாய் 335,120.00 செலவு செய்யப்பட்டுள்ளது.

- **ரத்துகல ஆதிவாசிகள் கிராமத்தை பெருந்தெரு ஊடறுத்துச் செல்கிறது. ஆகவே சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க முடியாதா? அது அந்த மக்களின் வருமானத்தைப் பெருக்கும் அல்லவா?**

அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய கலாசார நிதியம் ரத்துகல ஆதிவாசிகள் கிராமத்தை மையப்படுத்தி அறம் பொருட்காட்சியகம் ஒன்றையும், நூலகம் ஒன்றையும், சந்தைப்படுத்தல் நிலையம் ஒன்றையும் கொண்டு நடத்துகிறது.

மத்திய கலாசார நிலையம் ஏற்கனவே ஆதிவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், கலாசாரத்தை சமூக மயப்படுத்தும் சுற்றுலா ஈர்ப்புகொண்ட இடமாக அபிவிருத்தி செய்வதற்குமான திட்டங்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

ஆதிவாசிகளை இணைத்துக்கொண்ட தேன் உற்பத்தி திட்டமொன்றும் நடைமுறையில் உள்ளது.

- **உங்கள் அமைச்சு பல நகர்வுகளை மேற்கொண்டிருந்தாலும்? அவை செயல் வடிவம் பெறுவதில் ஏன் தாமதம்?**

இது ஒரு மிகப்பெரிய பணி. ஆதிவாசிகள் விவகாரம் எங்களுடைய அமைச்சுக்கு உரியது என்றாலும் எல்லா பிரச்சினைகளையும் ஒன்றாக தீர்க்க முடியாது. பிரச்சினைகளைத் தீர்க்க நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சுடன் இணைந்து செயல்பட வேண்டும். தண்ணீர்ப் பிரச்சனையைத் தீர்க்க நீர் வழங்கள் அமைச்சு. வனம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களத்துடனும் வனப்பாதுகாப்பு திணைக்களத்துடனும் இணைந்து செயல்பட வேண்டும். வீதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை எடுத்துக் கொண்டாலும் இதர பிரச்சனைகள் என்றாலும் அவை ஏதோ ஒரு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டிருக்கும். அதனால் இவற்றை உடனடியாக தீர்க்க முடியாது. எல்லா பிரச்சினைகளையும் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். அவர் தலைமையில் எல்லா அமைச்சர்களையும் ஒன்றிணைத்து பிரச்சனைகளைத் தீர்க்குமாறும் கேட்டுள்ளோம். அதற்கு சாதகமான பதில் கிடைக்குமென எதிர்ப்பார்க்கின்றோம். அதேபோல சில பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆதிவாசிகளின் ஒத்துழைப்பு அவசியம். சில நகர்வுகளை அவர்கள் எதிர்ப்பதுமுண்டு. நிலை இது என்றாலும், பிரதமரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்குமென நம்புகிறோம்.

**(ஆதிவாசிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பற்றி கலந்துரையாட கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க அவர்களை தொடர்பு கொண்டபோது, அதற்கு சாதகமான பிரதிபலிப்பை நல்கிய அவர் இந்த விவகாரங்களை முறையாக தெரிந்து கொள்வதற்கு திருமதி நிஷாந்தி ஜயசிங்கவை தொடர்புபடுத்தினார். தமது விடயப் பரப்பு பற்றிய சரியான புரிதலை சமூக மயப்படுத்த அமைச்சர் வழங்கிய ஒத்துழைப்புக்கு எமது நன்றிகள் உரித்து.)**

**– ரிரான் பங்ககமஆரச்சி**

# இந்தப் பிரச்சனைகளின் ஆழ அகலம் மிகவும் கூர்மையானது

## தம்பானே குணவர்தன

ஆதிவாசிகள் என்ற வகையில் எங்களுடைய அடிப்படை மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு தரவில்லை. காணி பிரச்சனை பொருளாதார பிரச்சினை மட்டுமல்ல வெளித் தரப்பிலிருந்து வரும் பிரச்சனைகளும் அவர்களுடைய பண்பாட்டு வாழ்வியலுக்கு அநீதியை ஏற்படுத்தியுள்ளது.

இதில் போதைவஸ்து பிரச்சினை மிகவும் சிக்கலானது. பத்து பன்னிரெண்டு வயது பிள்ளைகளும் மதுவுக்கு அடிமையாகி விட்டார்கள். இந்த நிலை தொடருமானால் ஆதிவாசிகளின் எதிர்காலம் நிச்சியமற்றதாகிவிடும்.

தம்பானயில் இருந்த ஒரு சிலருக்கு மகாவலி திட்டத்தால் தானிகல பிரதேசத்தில் காணிகள் கிடைத்துள்ளன. அவர்கள் அரை ஏக்கர் காணியில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். சுதந்திரமாக நடமாடிய அவர்களின் மனநிலை தற்போது எப்படி இருக்கும்?

காட்டுக்குச் செல்ல முடியாது. விவசாயத்தால் போதிய வருமானம் இல்லை. யானைகளின் தொல்லை. ஆகவே இந்தப் பிரச்சனைகளின் ஆழ அகலம் மிகவும் கூர்மையானது.

**– பிரஜை**

CPA
Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

முகவரி : இல 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை.
தொலைபேசி : +94112081384, +94112081385, +94112081386
தொலைநகல் : +94112081388
மின்னஞ்சல் : info@cpalanka.org
இணையதளம் : www.cpalanka.org
முகநூல் : www.facebook.com/cpasl
டுவிட்டர் : @cpasl